என்று சொல்லவில்லை. இப்படி சீரியஸ் புரபோர்ஷனாக வரக் கூடிய இந்த விஷயத்தை, ஆர்டர் போட்டு விடுவதோடு நிற் காமல், இந்த ஸ்டூடன்சிலே ஒரு சின்ன செக்ஷன் மாத்திரம் இப்படிச் செய்வதால், அவர்களை மட்டும் அய்சோலேட் செய்து மெஜாரிடி ஸ்டூடன்சை இதிலிருந்து காப்பாற்றுவதற்கு அரசாங் கம் தக்க ஏற்பாடுகள் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இரண்டு இடங் களில் அப்பேர்ப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றதாக அரசுக்குத் தக வல் வந்திருக்கிறது. (1) மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சி, (2) அண்ணாமலை பொறியியற் கல்லூரி, ஆகியவை களில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றது. ஆகவே, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, அவைகள் ஒடுக்கப் பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக்கழகம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

*வினா எண். 744—திரு. எம். கண்ணன்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா:

(அ) அரிசன நல வீட்டுவசதி வாரியத்தின்கீழ் 1977-78, 1978-79 ஆண்டுகளில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன?

(ஆ) எத்தனை வீடுகள் கட்டுமான வேலையில் உள்ளன? அவை எப்பொழுது முடிக்கப்படும்?

(இ) வரும் ஆண்டில் எத்தனை ஆயிரம் வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தமிழ்நாடு அரிசன வீட்டுவசதி வளர்ச்சிக் கழகம் மூலம் 1977-78 ஆண்டில் 1,850-ம், 1978-79 ஆம் ஆண்டில் 2,448 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 2,704 வீடுகள் கட்டுமான வேலையில் உள்ளன. அவை விரைவில் கட்டி முடிக்கப்படும்.

(இ) 1979-80-ம் ஆண்டில் வீடுகள் கட்டுவது குறித்து அந்த நிதி ஆண்டில் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

தலைவர் அவர்களே அடுத்த இரண்டு கேள்விகளையும் இதோடு சேர்த்தேஎடுத்துக் கொள்ளலாம்.